## May 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.993 உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், 5 கிலோ சிலிண்டர் விலை ரூ.261.50 அதிகரிக்கப்பட்டுள்ளது.

(i) சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மாதந்தோறும் 1-ஆம் தேதி பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களான இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை மாற்றியமைக்கும். அதன்படி, மே 1-ஆம் தேதியான வெள்ளிக்கிழமை சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் மாற்றியமைத்தன.

(ii) உணவகங்கள் உள்ளிட்ட இடங்களில் பயன்படுத்தப்படும் 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் வெள்ளிக்கிழமை முதல் ரூ.993 உயர்த்தின. இதையடுத்து, அந்த சிலிண்டர் தற்போது ரூ.3,071.50-க்கு விற்கப்படுகிறது.

(iii) 5 கிலோ எடை கொண்ட சிலிண்டர் விலையை ரூ.549-இல் இருந்து ரூ.810.50-ஆக எண்ணெய் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன. இது ரூ.261.50 அதிகமாகும்.

(iv) தொழிற்சாலைகள், தொலை பேசி நிறுவன கோபுரங்களுக்குப் பயன்படுத்த மொத்தமாக கொள்முதல் செய்யப்படும் டீசல் விலை லிட்டருக்கு ரூ.137-இல் இருந்து ரூ.149-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(v) வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் மாற்றமில்லை:

- அதே நேரத்தில் வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் மாற்றியமைக்கவில்லை. மேலும், உள்நாட்டு விமானங்களுக்கான எரிபொருள் விலையையும் எண்ணெய் நிறுவனங்கள் மாற்றவில்லை. சர்வதேச விமானங்களுக்கான விமான எரிபொருள் விலையை 5 சதவீதத்துக்கும் மேல் உயர்த்தியுள்ளன.
- இதுகுறித்து பொதுத் துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், சில்லறை விலையில் விற்கப்படும் பெட்ரோல், டீசல் விலை மாற்றப்படவில்லை என்றும், அதேபோல் மண்ணெண்ணெய் விலையும் மாற்றியமைக்கப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 33 கோடி பேரால் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை, விமான எரிபொருள் விலை ஆகியவையும் மாற்றப்படவில்லை என்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

2. பெட்ரோல் டீசல் விலை விரைவில் உயர்த்தப்படும் என்பதை மறுக்க முடியாது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு பல்வேறு ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வந்தாலும், இந்தியாவில் கடந்த 4 ஆண்டுகளாக பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படாமல் உள்ளது.

(ii) அண்மையில் மேற்காசியாவில் ஏற்பட்ட போர், ஹோர்முஸ் நீரிணை மூடல் பிரச்னையால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த வாரத்தில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 126 அமெரிக்க டாலர் என்ற உச்சத்துக்கு சென்றது. மேற்காசிய போர் ஏற்பட்ட பிறகு 110 டால ருக்கு மேல்தான் கச்சா எண்ணெய் விலை தொடர்கிறது.

(iii) ஏற்கெனவே இந்தியாவில் வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டு ரூ.913 என்ற அளவில் உள்ளது. வணிகப் பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர் 3,071.50 என்ற புதிய உச்சத்தில் உள்ளது. அதே நேரத்தில் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் விலையை மட்டும் உயர்த்தவில்லை. 'ஷெல்' உள்ளிட்ட தனியார் நிறுவனங்களின் பெட்ரோல், டீசல் விலை ஏற்கெனவே உயர்த்தப்பட்டுள்ளது.

(iv) இந்நிலையில் மத்திய அரசு வட்டாரங்கள் இது தொடர்பாக கூறுகையில், 'பெட்ரோல், டீசல் விலை விரைவில் உயர்த்தப்படும் என்பதை மறுப்பதற்கு இல்லை என்று தெரிவித்துள்ளன. இந்தியாவில் கடந்த 2022 ஏப்ரல் முதல் பெட்ரோல் டீசல் விலை மாற்றமின்றி தொடர்ந்து வருகிறது. அப்போது முதல் கச்சா எண்ணெய் விலை ஏற்ற இறக்கத்தைச் சந்தித்து வருகிறது என்றபோதும், கச்சா எண்ணெய் விலை சரியும்போது எரி பொருள் விலை குறைக்கப்பட வில்லை. அதே நேரத்தில் விலை ஏறும்போதும் அதற்கு ஏற்ப உயர்த்தப்படவில்லை. குறைந்தபோது கிடைத்த கூடுதல் லாபத்தை வைத்து விலை உயர்வின்போது எண்ணெய் நிறுவனங்கள் சமாளித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(v) ஆனால், இப்போது தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை உச்சத்தில் இருப்பதால் பெட்ரோல் விற்பனையில் ஒரு லிட்டருக்கு சுமார் ரூ.20, டீசல் விற்பனையில் ஒரு லிட்டருக்கு சுமார் ரூ.100 வரை எண்ணெய் நிறுவனங்கள் இழப்பைச் சந்திப்பதாகக் கூறப்படுகிறது.

(vi) மேற்கு வங்கத்தில் இறுதிக் கட்டத் தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும் என்று கடந்த வாரம் வெளியான தகவலை மத்திய அரசு அதிகாரிகள் மறுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

3. தகடூரை ஆண்ட மன்னரான வள்ளல் அதியமான் பிறந்த நாளையொட்டி அவரது சிலைக்கு தமிழக அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

(i) கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் தகடூரில் (தற்போதைய தருமபுரி) சித்ரா பௌர்ணமி நாளில் பிறந்ததாகவும், அவர் மன்னராகி ஆட்சி செய்த காலத்தில், ஔவையாருக்கு நெல்லிக்கனி வழங்கியதும் வரலாறு. எனவே தமிழக அரசு தருமபுரியில் அதியமான் கோட்டை பகுதியில் அவருக்கென, அதியமான் கோட்டம் என்ற பெயரில் நினைவிடம் அமைத்துள்ளது.

(ii) அந்தவகையில் ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி நாளில் அதியமான் பிறந்தநாள் விழாவை, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை கொண்டாடி வருகிறது.

(iii) நிகழாண்டு சித்ரா பௌர்ணமி தினமான மே 1 ஆம் தேதி அதியமான் பிறந்த நாள் விழா அதியமான்கோட்டை பகுதியில் அமைந்துள்ள அதியமான் கோட்ட வளாகத்தில் நடைபெற்றது.

4. பிரேஸில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டாசில்வா, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சந்தித்து வரும் தொடர் பின்னடைவுகள் அவரின் அரசியல் செல்வாக்கைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

(i) பிரேஸிலின் முன்னாள் அதிபர் ஜெயிர் பொல்சொனாரோவின் தண்டனையைக் குறைக்கும் மசோதாவைத் தடுத்து வைத்திருந்த லூலா டாசில்வாவின் 'வீட்டோ' அதிகாரத்தை அந்நாட்டு நாடாளுமன்றம் ரத்து செய்துள்ளது.

(ii) கடந்த 2022, அக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் தற்போதைய அதிபர் லூலா டாசில்வா வெற்றிபெற்ற பிறகு, பொல்சொ னாரோவின் ஆதரவாளர்கள் பிரதமர் அலுவலகம், நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம் உள்ளிட்ட அதிகார பீடங்களைத் தாக்கினர்.

(iii) ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பொல்சொனாரோவுக்கு 27 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பொல்சொனாரோவின் மற்றும் இவ்விவகாரத்தில் தொடர்புடையவர்களுக்குத் தண்டனையைக் குறைக்கும் மசோதாவை பிரேஸில் நாடாளுமன்றம் கடந்த டிசம்பரில் நிறைவேற்றியது.

(iv) லூலா டாசில்வாவின் 'வீட்டோ' அதிகாரத்தால் தடுக்கப்பட்டிருந்த இந்த மசோதாவை, நாடாளுமன்றம் மீண்டும் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளதன் மூலம் பொல்சொனாரோவின் தண்டனை தற்போது 2 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(v) 71 வயதாகும் பொல்சொனாரோ, உடல்நலக் குறைவு காரணமாக மனிதாபிமான அடிப்படையில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தற்போது தோள்பட்டை அறுவை சிகிச்சைக்காக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அரசியல் மாற்றங்கள் நடைபெற்றுள்ளன.

(vi) முன்னதாக, உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு லூலா டாசில்வா சொலிசிட்டர் பரிந்துரைத்த ஜெனரல் ஜார்ஜ் மெசியாஸின் நியமனத்தை நாடாளுமன்ற மேலவையான செனட் சபை நிராகரித்தது.

(vii) 81 உறுப்பினர்களைக் கொண்ட அவையில் 41 வாக்குகள் தேவை என்ற நிலையில், அவருக்கு ஆதரவாக 34 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. கடந்த ஒரு நூற்றாண்டில் அதிபரால் உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு முன்மொழியப்பட்ட ஒருவர் நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

5. இந்தியாவின் முதல் பல வழிச்சாலை தங்கு தடையற்ற சுங்கச்சாவடி அமைப்பு குஜராத் மாநிலத்தில் தொடங்கப்பட்டது.

(i) சூரத்-பரூச் தேசிய நெடுஞ்சாலை-48 வழித்தடத்தில் அமைந்துள்ள சோர்யாசி சுங்கச்சாவடியில் இந்த புதிய சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் சுங்கக் கட்டணம் செலுத்த வாகனங்கள் நிற்கத் தேவையில்லை.

(ii) தானியங்கி வாகனப் பலகை அங்கீகாரம் (ஏஎன்பிஆர்), செயற்கை நுண்ணறிவு பகுப்பாய்வு மற்றும்ஃபாஸ்டேக் ஆகிய நவீன தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கேமராக்கள் மற்றும் க்யூஆர் குறியீடுகள் மூலம் வாகனம் சென்றுகொண்டிருக்கும்போதே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது.

(iii) இதுகுறித்து மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சா லைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'குஜராத்தில் இன்று தொடங்கப்பட்டுள்ள நாட்டின் முதல் பல வழிச்சாலை தங்குதடையற்ற சுங்கச் சாவடி அமைப்பு சுங்கச்சாவடிகளை எண்மமயமாக்கல், நெடுஞ்சாலைகள் உள்கட்டமைப்பை நவீனமயமாக்கல் ஆகிய முன்னெடுப்புகளின் மைல்கல்.

(iv) இந்த புதிய சுங்கச்சாவடி கட்டண வசூலிப்பு முறையின்கீழ் வாகன போக்குவரத்து நெரிசல், வாகன உமிழ்வு மற்றும் சுங்கச்சாவடிகளில் மனிதர்களின் தலையீடு குறைக்கப்படவுள்ளது. வாகனங்களின் எரி சக்தி திறன் மேம்படவுள்ளது.

(v) மேலும் வணிக எளிமைமயமாக்கல் ஊக்குவிக்கப்பட்டு நாடு முழுவதும் சரக்கு மற்றும் தளவாடங்கள் விரைவாக கொண்டு செல்வது உறுதிப்படுத்தப்படுகிறது' என குறிப்பிட்டார்.

(vi) முன்னதாக, கடந்த வாரம் நடைபெற்ற இரண்டாவது தளவாடங்கள் ஆற்றல் மாநாடு மற்றும் விருதுகள் 2026 நிகழ்ச்சியில் பங்கேற்ற நிதின் கட்கரி, நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில சுங்கச்சாவடிகளில் டிசம்பர் மாதத்தில் இருந்து தடையற்ற சேவைகள் அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

6. சட்டவிராத பணப்பரிவர்த்தனை என்ற புற்று நோயை குணப்படுத்தவே, அமலாக்கத்துறைக்கு பிரதமர் நரேந்திர மோடி கூடுதல் அதிகாரம் அளித்துள்ளார். யாரையும் குறிவைக்க கூடுதல் அதிகாரம் அளிக்கவில்லை என்று மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌதரி தெரிவித்துள்ளார்.

(i) அமலாக்கத்துறை அமைப்பு கடந்த 1956-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதன் 70-ஆவது ஆண்டு நிகழ்ச்சி தில்லியில் நடைபெற்றது.

7. கௌதம புத்தரின் பிறப்பு, ஞானோதயம் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளைக் குறிக்கும் புத்த பூர்ணிமா திருவிழாவையொட்டி ஹிமாசல பிரதேச மாநிலம் சிம்லாவில் உள்ள டோர்ஜே ட்ராக் பௌத்த மடாலயத்தில் சிறப்பு பூஜை மேற்கொண்ட பௌத்த துறவிகள்.

8. இந்தியாவில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராகத் தொடர்ந்து நடைபெறும் பாலியல் வன்முறை குறித்த ஆய்வு

- ஏராளமான சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும், பெண்கள் மற்றும் இளம் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்முறை சற்றும் குறையாமல் தொடர்ந்து வருகிறது. 18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் தாக்குதல், ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கே ஒரு பெரும் அவமானமாகும்.
- பெண்களுக்கு எதிரான வன்முறையின் தாக்கம்: உடனடி உடல்ரீதியான காயங்களுக்கு அப்பால், பாதிக்கப்பட்டவர்கள்—குறிப்பாகச் சிறுமிகள்—வாழ்நாள் முழுவதும் உளவியல் அழுத்தத்தைச் சந்திக்க நேரிடுகிறது; மேலும், ஒருவித சமூகக் குற்றவுணர்வுடனேயே வாழவும் அவர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள். இக்குற்றங்களால் எழும் ஒரு முக்கிய சமூகச் சிக்கல், பாதிக்கப்பட்ட சிறுமிகள் கர்ப்பமடைவதாகும்.
- உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள்:
- பாலியல் தாக்குதலின் விளைவாகக் கர்ப்பம் ஏற்படும் நேர்வுகளில், பாதிக்கப்பட்டவருக்கு எது "நல்லது" என்பதை மருத்துவர்களோ அல்லது அரசோ தீர்மானிக்கக் கூடாது என்று ஏப்ரல் 30 அன்று வழங்கிய ஒரு தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. மாறாக, மருத்துவ ரீதியாகக் கர்ப்பத்தைக் கலைப்பது தொடர்பான முடிவை, பாதிக்கப்பட்டவரின் மற்றும் அவரது பெற்றோரின் விருப்பத்திற்கே விட்டுவிட வேண்டும் என்று அது கூறியது.
- 'மருத்துவ ரீதியாகக் கர்ப்பத்தைக் கலைத்தல் சட்டத்தில்' (Medical Termination of Pregnancy Act) 2021-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம், கர்ப்பத்தைக் கலைப்பதற்கான கால வரம்பை 20 வாரங்களிலிருந்து 24 வாரங்களாக உயர்த்தியிருந்தாலும், பாலியல் வன்கொடுமை வழக்குகளில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மேலும் மன உளைச்சல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, கர்ப்பத்தைக் கலைப்பதற்கு என்று எந்தவொரு நிலையான கால வரம்பும் இருக்கக்கூடாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.
- ஏப்ரல் 24 அன்று, நீதிபதி பி. நாகரத்னா மற்றும் நீதிபதி உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வு, சுமார் 30 வாரக் கர்ப்பிணியாக இருந்த 15 வயதுச் சிறுமி ஒருவர், கருக்கலைப்பு செய்துகொள்ள அனுமதி அளித்தது.
- NCRB-இன் மாநிலவாரியான புள்ளிவிவரங்கள் (18 வயதுக்குட்பட்ட சிறுமிகள்):

பல்வேறு மாநிலங்களில் சிறுமிகளுக்கு எதிராகப் பதிவான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்த விவரங்களை

உள்ளடக்கிய, தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகள் பின்வருமாறு:

- 2018 (மொத்தம் 9,312 வழக்குகள்): மத்தியப் பிரதேசம் 2,830 வழக்குகளுடன் முதலிடத்தில் இருந்தது; அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (1,353) மற்றும் கேரளா (1,137) ஆகிய மாநிலங்கள் இருந்தன. தமிழகத்தில் 6 வழக்குகள் பதிவாகின.
- 2019 (மொத்தம் 4,936 வழக்குகள்): ராஜஸ்தானில் 1,313 வழக்குகளும், கேரளாவில் 1,262 வழக்குகளும் பதிவாகின. கவனிக்கத்தக்க வகையில், மத்தியப் பிரதேசத்தில் இந்த ஆண்டில் 0 வழக்குகள் மட்டுமே பதிவாகியிருந்தன. தமிழகத்தில் 9 வழக்குகள் பதிவாகின.
- 2020 (மொத்தம் 2,640 வழக்குகள்): ராஜஸ்தான் 1,279 வழக்குகளுடன் தொடர்ந்து முன்னிலையில் இருந்தது; அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் (577) மற்றும் உத்தரப் பிரதேசம் (204) ஆகியவை இடம்பிடித்தன. தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 0 வழக்குகள் பதிவாகின.
- 2021 (மொத்தம் 3,033 வழக்குகள்): ராஜஸ்தானில் 1,452 வழக்குகளும், ஆந்திரப் பிரதேசத்தில் 614 வழக்குகளும், ஜார்கண்டில் 295 வழக்குகளும், உத்தரப் பிரதேசத்தில் 256 வழக்குகளும் பதிவாகின. தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 0 வழக்குகள் பதிவாகின.
- 2022 (மொத்தம் 1,004 வழக்குகள்): உத்தரப் பிரதேசத்தில் 458 வழக்குகளும், இமாச்சலப் பிரதேசத்தில் 213 வழக்குகளும், ஜார்கண்டில் 184 வழக்குகளும் பதிவாகின. தமிழ்நாட்டில் 5 வழக்குகள் பதிவாகின; அதேவேளையில் கேரளாவில் 0 வழக்குகள் பதிவாகின.
- இந்த புள்ளிவிவரங்கள் பதிவான வழக்குகளை மட்டுமே பிரதிபலிக்கின்றன; உண்மையில், பதிவாகாத வழக்குகள் இன்னும் பல இருக்கலாம்.

அரசாங்கத்திற்கான நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகள்:

- பாலியல் வன்கொடுமை தொடர்பான வழக்குகளின் நீதிமன்ற விசாரணைகள் ஒரே வாரத்திற்குள் நிறைவு செய்யப்படுவதை உறுதிசெய்யும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவரின் முழுச் சொத்துக்களையும், நீதியின் ஒரு வடிவமாகப் பாதிக்கப்பட்டவருக்கே மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று தலைமை நீதிபதி (டி.ஒய். சந்திரசூட்) பரிந்துரைத்தார்.
- "நீதி தாமதமானால், அது மறுக்கப்பட்டதற்குச் சமம்" என்ற அடிப்படையில், பாலியல் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மிக விரைவாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்று இது வலியுறுத்துகிறது.

9. ஜனநாயக வாக்குப்பதிவு செயல்முறை, வாக்குகள் வாங்கப்பட்டு விற்கப்படும் ஒரு சந்தையாகத் தரம் தாழ்ந்துள்ளதற்கான ஆய்வு.

(i) உலகளாவிய வரலாற்றுப் பின்னணி

வாக்களிக்கும் உரிமை என்பது ஒரு கொடையாகக் கிடைக்கவில்லை; மாறாக, பல நூற்றாண்டுகள் நீடித்த கடுமையான போராட்டங்களின் மூலமே அது ஈட்டப்பட்டது.

- பண்டைய கிரேக்கம் (ஏதென்ஸ்): அங்கு ஒரு வாக்குப்பதிவு முறை நடைமுறையில் இருந்தபோதிலும், அது உயர்குடியினருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது; அடிமைகளும் பெண்களும் அதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.
- பிரெஞ்சுப் புரட்சி: இது ஜனநாயகத்தின் உண்மையான "வசந்த காலத்தை"க் குறிப்பதாக அமைந்ததுடன், மக்கள் சார்ந்த ஆட்சிமுறைக்கான வாயில்களையும் திறந்துவிட்டது.
- அமெரிக்கப் புரட்சி: அரசாங்கத்தின் அதிகாரம் என்பது ஆளப்படுபவர்களின் ஒப்புதலில் இருந்தே பெறப்பட வேண்டும் எனும் தனித்துவமான புரட்சிகரக் கொள்கையை இது நிலைநிறுத்தியது; "பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை" (No taxation without representation) எனும் புகழ்பெற்ற முழக்கத்தையும் இது முன்வைத்தது.
- பிரிட்டிஷ் சார்ட்டிஸ்ட் இயக்கம்: இவ்வியக்கம் அனைவருக்கும் வாக்குரிமை (Universal Suffrage) வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. பிரிட்டனில் பெண்களுக்கான வாக்குரிமையைப் பெறுவதற்காக நடைபெற்ற போராட்டம் குறிப்பாக மிகவும் தீவிரமானதாக அமைந்திருந்தது.
- ஆஸ்திரேலியாவிற்கு நாடு கடத்தப்படுதல் (1787): வாக்குரிமை கோரியவர்களை ஒடுக்கும் நோக்கில், பிரிட்டிஷ்

அரசாங்கம் அவர்களைக் குற்றவாளிகள் என அறிவித்து, ஆஸ்திரேலியாவிற்கு நாடு கடத்தியது. 1787-ஆம் ஆண்டு ஜூன் 13-ஆம் தேதி, 11 கப்பல்களில் ஏற்றப்பட்ட 6,000 கைதிகள் 260 நாட்கள் நீடித்த ஒரு நீண்ட பயணத்தை மேற்கொண்டனர்; அவர்களில் பலர் கரை சேரும் முன்னரே நோயின் காரணமாக உயிரிழந்தனர்.

(ii) வரலாற்று உண்மைகள்: இந்தியா அனைவருக்கும் வாக்குரிமை பெற்றதற்கான பயணம்

- சுதந்திரத்திற்கு முந்தைய கட்டுப்பாடுகள்: 1919 மற்றும் 1935-ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ், வாக்களிக்கும் உரிமை என்பது சொத்துரிமை கொண்டவர்களுக்கும், கல்வி கற்ற உயர்குடியினருக்கும் மட்டுமே மிகக் கடுமையாக வரையறுக்கப்பட்டிருந்தது.
- 1945-ஆம் ஆண்டின் எதார்த்த நிலை: அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்கள் நடைபெற்றபோது, குறைந்தபட்சம் ₹30 வரியாகச் செலுத்தியவர்கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்; இது மொத்த மக்கள் தொகையில் வெறும் 15 சதவீதத்தினரை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தியது.
- நீண்ட காலப் போராட்டம்: இந்தியாவில் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை, மோதிலால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழுவின் வாயிலாக 1928-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது.
- முக்கியத் தாக்கங்கள்: சாதி, அந்தஸ்து ஆகிய வேறுபாடுகள் ஏதுமின்றி அனைவருக்கும் சமமான வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதில், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (Communist Party), டாக்டர் ராம் மனோகர் லோஹியாவின் சோசலிசக் கட்சி மற்றும் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆகியவை மிக முக்கியப் பங்காற்றின.
- அரசியலமைப்பு ரீதியான வெற்றி: இறுதியாக, இந்திய அரசியலமைப்பின் 326-வது பிரிவின் வாயிலாக, அனைவருக்கும் வாக்குரிமை (Universal Adult Suffrage) வழங்கப்பட்டது; "கீழ் சாதியினர்" சமமான அதிகாரத்தைப் பெறுவதை விரும்பாத தரப்பினரிடமிருந்து, இம்முடிவு குறிப்பிடத்தக்க அளவிலான எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது.

(iii) "கள்ளச்சந்தை" பகுப்பாய்வு (இந்தியாவின் தற்போதைய சூழல்)

- வாக்குகளின் வணிகமயமாக்கல்: வாக்களித்தல் என்பது ஒரு ஜனநாயகக் கடமையிலிருந்து விலகி, தற்போது ஒரு கள்ளச்சந்தை விற்பனைப் பொருளாக மாறிவிட்டது.
- கண்காணிப்பின் தோல்வி: பிரம்மாண்டமான பாதுகாப்பு ஏற்பாடுகள் (சுமார் 1 லட்சம் காவல்துறையினர் மற்றும் 23,000 துணை ராணுவப் படையினர்) மற்றும் 24 மணி நேரக் கண்காணிப்பு இருந்தபோதிலும், சட்டவிரோதப் பண விநியோகம் கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டையும் சென்றடைகிறது.
- சட்டத்தின் இயலாமை: இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC) பிரிவு 171B லஞ்சத்திற்குச் சிறைத்தண்டனையையோ அல்லது அபராதத்தையோ விதிக்கிறது; மேலும் 1951-ஆம் ஆண்டின் சட்டத்தின் பிரிவு 123, இத்தகைய செயல்களில் ஈடுபடும் வெற்றி பெற்ற வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்ய அனுமதிக்கிறது. இருப்பினும், தற்போதைய தேர்தல்களில் நிலவும் "சூதாட்ட"த் தன்மையைத் தடுத்து நிறுத்த, இச்சட்டங்கள் அரிதாகவே திறம்படச் செயல்படுத்தப்படுகின்றன.

(iv) தாக்கம் மற்றும் சீர்திருத்தத்திற்கான உலகளாவிய முயற்சிகள்

- சர்வதேச முன்னெடுப்புகள்: நேர்மையான தேர்தல்களை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை ஒரு கூட்டு உடன்படிக்கையை உருவாக்கியுள்ளது; மேலும் தேர்தல் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்காக ஐரோப்பிய நாடுகள் இணைந்து "வெனிஸ் ஆணையத்தை" (Venice Commission) நிறுவியுள்ளன.
- கென்யா முன்னுதாரணம்: குடிமக்களின் ஒரு மாபெரும் மக்கள் இயக்கம் மூலம், தங்கள் தேர்தல் நடைமுறையிலிருந்து கட்டமைப்பு ரீதியான ஊழலை வெற்றிகரமாக அகற்றிய ஒரு சிறந்த முன்னுதாரணமாக கென்யா சுட்டிக்காட்டப்படுகிறது.

(v) முடிவுரை மற்றும் எதிர்காலப் பாதை

- தேர்தல் ஆணையத்தின் "cVIGIL" செயலி (App) தற்போது வெறும் ஒரு "காகித அமைப்பாகவே" (பெயரளவு அமைப்பாகவே) பார்க்கப்படுகிறது. இது பொதுமக்களின் தீவிரக் கண்காணிப்பிற்கான ஒரு தளமாக உருமாற்றப்பட வேண்டும்.
- அரசியல் அமைப்பில் "பார்த்தீனியம் களைச்செடியைப்" போலப் பரவியுள்ள ஊழலை வேரறுக்க ஒரு தீவிரமான மாற்றம் தேவைப்படுகிறது; வாக்குகளின் புனிதத்தன்மையை மீட்டெடுக்கும் வலிமை புதிய தலைமுறையினரிடம்

உள்ளது என்ற நம்பிக்கை இதில் வெளிப்படுத்தப்படுகிறது